★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 53630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ... ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 15உ. புதன் (31—10—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 16உ. வியாழன் (1—11—56) [இதழ் 122

மரத்தூளிலிருந்து காகித உற்பத்தி

புதிய கேரள மாநிலத்தில் ஆலை நிறுவப்படும்

★

மரத் தூளிலிருந்து காகித உற்பத்தி செய்வதற்கான ஒரு காகித உற்பத்தி ஆலை, கேரளத்தில் விரைவில் நிறுவப்படும் என்று தெரியவருகிறது.

புதிய கேரளத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் பெரிய கைத்தொழில் திட்டத்தில் இது ஒன்ருகும்.

இளைஞர் விழாவை ஒவ்வோர் ஆண்டும் வெவ்வேறு நகரங்களில் நடத்தக் கோரிக்கை

டில்லி நகரிலேயேதான் நடத்தவேண்டும் என்ற டில்லியின் திமிரான பதில்

விழாவை சென்னைப் பல்கலைக்கழகம் ஒதுக்கியது

வட நாட்டு மாணவ—மாணவிகள் கூட்டாக ஆடினர்!

தென்னுட்டினர் கூட்டு நடனத்தில் அது இடம்பெறவில்லை!

அனைத்திந்தியப் பல்கலைக் கழக மாணவ—மாணவிகளைக் கொண்ட இளைஞர் விழா ஒன்று டில்லியில் நடைபெற்றது. அந்த விழாவில் சென்னை பல்கலைக் கழகம் மட்டும் கலந்துகொள்ள மறுத்துவிட்டது.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் அவ்விழாவை ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நகரங்களில் நடத்தவேண்டும் என சென்னை பல்கலைக் கழகம், இந்தியப் பேரரசைக் கோரியது; ஆனால், இந்தியப் பேரரசோ, சென்னையின் கோரிக்கையை ஏற்க மறுத்து, இவ்வாண்டும் டில்லியிலேயே மேற்படி விழாவை நடத்த முன் வந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் கோரிக்கை நியாயமானதாகவும், மற்றப் பல்கலைக் கழகங்களால் மனமுவந்து வரவேற்கத் தகுந்ததாக இருந்தும்கூட, இந்தியப் பேரரசு அவ்வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டது கண்டு, சென்னை பல்கலைக் கழகம், டில்லியில் நடைபெற்ற இவ்வாண்டு இளைஞர் விழாவில் கலந்துகொள்வது இல்லை என முடிவு கட்டிவிட்டது; அம்முடிவை செயலளவிலும் சென்னை பல்கலைக் கழகம் நிறைவேற்றி இருக்கிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் விழாவில் ஏன் பங்குகொள்ளவில்லை எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, டில்லி அதிகார வட்டாரம் அலட்சியமான பதிலைத் தந்ததாம்.

இந்தத் தகவலை சென்னை 'மெயில்' கட்டுரையாளர் குறிப்பிட்டு விட்டு, விழாவில் சென்னைப் பல்கலைக் கழகம் கலந்துகொள்ளாததற்கான மேற்குறித்துள்ள உண்மையான காரணத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்ணமலைப் பல்கலைக் கழகம் மேற்படி விழாவில் பங்குகொண்டிருக்கிறது. அக்கழகத்தைச் சேர்ந்த மூன்று மாணவிகள் உட்பட 35 மாணவர்கள் விழாவில் கலந்துகொண்டார்கள்.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் மொத்தத்தில் 1 600 ஆண்-பெண் மாணவ—மாணவிகள் கலந்துகொண்டிருந்தனர்; அவர்கள், 13 மொழிகளின் வழி வந்தவர்களாகும்.

இந்த இளைஞர் விழா முதல் முதலாக 1954-ல் துவக்கப்பட்ட பொழுது, இந்தியத் துணைக்கண்டத்தில் 14 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 780 மாணவர்களே கலந்துகொண்டனர். சென்ற ஆண்டில் 20 பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 1,100 மாணவர்கள் இடம் பெற்றிருந்தனர்.

சென்ற கிழமையில் இந்தியப் பிரதமர் நேருவால் துவக்கப்பட்ட இவ்வாண்டு இளைஞர் விழாவில், 81 பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 1,600 மாணவர்கள் கலந்துகொண்டனர் என 'மெயில்' கட்டுரையாளர் தகவல் தந்திருக்கிருர்.

விழா துவங்கிய மூன்று ஆண்டுக் காலமாக நடைபெற்ற மூன்று விழாக்களும் டில்லி நகரிலேயே நடைபெற்றுள்ளன.

இளைஞர் விழாவில் இசை, நாடகம், நடனம் போன்ற கலைகள் இடம் பெற்றிருந்தன; மாணவ மாணவிகள் ஒன்ருகச் சேர்ந்து கூட்டு நடனமும் ஆடினுர்கள்.

மாணவ மாணவிகள் ஒன்ருகச் சேர்ந்து ஆடும் கூட்டு நடன வகை, தென்னிந்திய பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரகவிட்டும், அவர்கள் ஆடிய கூட்டு நடனத்தில் இடம் பெற்று இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஆணும் பெண்ணும் சேர்ந்து கூட்டாக ஆடும் வழக்கம், தென்னிந்திய நடன பாரம்பரியத்தில் இல்லை என்பது கருதத்தக்கது.

'கடுமையான வரிகளை அரசாங்கம் சுமத்தியுள்ளது'

பொதுத் தேர்தலில் வணிகர் பிரதிநிதிகள் போட்டியிடுவர்

சங்கத் துணைத் தலைவர் விளக்கம்

ஈரோடு, அக். 31—

"அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் வணிகர்கள் போட்டியிடுவார்கள்" என்று தமிழ் நாடு வணிகர்கள் சங்கத் துணைத் தலைவர் திரு. கேசவலால் காளிதாஸ் சேட் தெரிவித்துள்ளார்.

"தமிழ் நாடு வணிகர் சங்கத்தின் தேர்தல் துணைக் குழு அடுத்த மாதம் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்து வணிகர்கள் சார்பில் அபேட்சகர்களாக நிறுத்தப்பட வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்கும்" என்றும் அவர் கூறினுர்.

மேலும் அவர் சொன்னதாவது:—

"வணிகர்கள்மீது அரசாங்கம் கடுமையான வரிகளைச் சுமத்தியுள்ளது. அத்துடன், வரி திரட்டு

(5-ம் கலம் பார்க்க)

புதிய மந்திரி சபையில் இடம்பெற மறுத்தது ஏன்?

கோபால ரெட்டி தரும் விளக்கம்

கர்னூல், அக் 30—

தான் ஏன் சஞ்சீவி ரெட்டியின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அவரது மந்திரி சபையில் அங்கம் வகிக்க மறுத்துவிட்டார் என்பதை கோபால ரெட்டியார் பத்திரிகையாளரிடம் விளக்கியிருக்கிருர்.

"காங்கிரஸ் மேலிடத்தவரும், சஞ்சீவி ரெட்டியும் என்னை மந்திரி சபையில் அங்கம் வகிக்குமாறு கேட்டனர்.

"சஞ்சீவி ரெட்டி, கானா வெங்கட் ராவ், அல்லூரி சத்தியநாராயண ராஜு ஆகியோர் என்னைப் பலமுறை சந்தித்து, வேண்டினர்.

"நான், 'எனது மந்திரி சபையில் உள்ள ஜி. இலட்சண்ண, சந்திர மௌலி போன்றவர்கள் புதிய மந்திரிசபையிலும் இருந்தால்தான், நான் மந்திரி சபையிலிருக்க முடியும்; எனது ஆதரவாளர் சிலரும் புதிய மந்திரி சபையிலிருந்தால் தான், நான் இருப்பதில் பலன் உண்டு' என்று கூறினேன்; ஆனல், சஞ்சீவி ரெட்டியோ இதை ஏற்க மறுத்துவிட்டு, என்னை மட்டும் மந்திரிசபைக்கு அழைத்தார். அதனுல் தான் நான் சேர மறுத்துவிட்டேன்," என்று கோபால ரெட்டியார் கூறியிருக்கிருர்.

'ஐதராபாத்தில் நேருவைச் சந்தித்து, இதுபற்றிப் பேசுவீர்களா?' என்று கேட்டபோது, 'நான் ஒன்றும் கூறுவதற்கில்லை; சஞ்சீவி ரெட்டி வேண்டுமானுல் நேருவைக் கலந்து பேசலாம். நான் எனது நிலையை விளக்கி, நேருவுக்கும் தேபருக்கும் கடிதம் எழுதிவிட்டேன்; என் முழு ஒத்துழைப்பையும் தருவதாக சஞ்சீவ ரெட்டிக்கு வாக்களித்திருக்கிறேன்' என்று கோபாலர் பதிலளித்திருக்கிருர்.

அம்பர் சர்க்கார்: 10,200 பேர் பயிற்சி பெறுகின்றனர்

புதுடில்லி, அக். 31—

அம்பர் சர்க்கா திட்டத்திற்காக நடைமுறை ஆண்டில் 30 பயிற்சி நிலையங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டதில், இதுவரை 28 பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டு, அதில் வேலை துவங்கிவிட்டதாம்.

உற்பத்தியில் ஈடுபட, நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள 300 நிலையங்களில், இதுவரையில் 152 நிலையங்கள் நிறுவப்பட்டு உற்பத்தி துவக்கப்பட்டுள்ளதாம்.

இதுவரை 14,200 அம்பர் சர்க்கார்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

அம்பர் சர்க்காவை உபயோகிக்க 10,200 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறதாம்.

***

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்!

அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு. சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே விறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானுல், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானுல், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது!
பொறுப்பு மிகுகிறது!
கடமையை விரைந்து செய்ய வாரீர்!—வாரீர்!!

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
31--11--56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு:—*நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—*

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

***

(2-ம் கலத்தின் தொடர்ச்சி)

வதிலும் வணிகர்களுக்குத் தொல்லைகள் தரப்படுகின்றன.

விலைவாசிகள் உயர்வுக்கு வணிகர்கள்தான் காரணம் என்று அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது; உண்மை அதுவல்ல; விலைவாசி உயர்வுக்கு வணிகர்களைக் குறை கூறிப் பயன் இல்லை.

"அரசாங்கத்துக்கு வணிகர்களின் துன்பம் தெரியாது; வணிகர்கள் பிரதிநிதிகள் சட்டசபையில் இல்லாததே அதற்குக் காரணம்.

"எனவேதான், வணிகர்கள் தேர்தலிலே போட்டியிடுவதென்று முடிவு செய்யப்பட்டது. இதற்குத் தமிழ் நாட்டு வணிகர் கழகங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

நம் நாடு
திராவிட தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை • 31—10—'56 புதன்

காங்கிரசு பற்றி பண்டிதர்!

நற்பண்பாளர்களும், மக்கள் நம்பிக்கை வைப்பதற்குத் தகுதி பெற்றிருப்பவர்களும் காங்கிரசு கட்சியில்தான் இருந்துவருகின்றனர் என அன்பர் ஆச்சாரியார் உரைக்கிறார். அத்தகையவர்களில் சிலர் அக்கட்சியைவிட்டு வெளியேறி, ஒரு பலம்பொருந்திய மாற்றுக் கட்சியை உருவாக்க முன்வரவேண்டும் எனவும் அதே ஆச்சாரியார் ஆசை கொள்ளுகிறார்.

இவ்வாறு காங்கிரசு கட்சியைக் குறித்து சிறப்பித்துப் பேசுகிற ஆச்சாரியார், அவ்வாறு அக்கட்சியைக் குறித்துப் புகழ்ந்து பேசுவதுடனும் இருந்துவிடுவதில்லை. தமிழ்நாடு காங்கிரசு கட்சியைப் பொறுத்தவரையில் ஜாதி வெறியும், வகுப்புணர்ச்சியும், பதவி மோகமும் தலைவிரித்து ஆடி வருகின்றன என அவர் குறிப்பிடத் தவறுவதும் கிடையாது.

காங்கிரசு கட்சியைக்குறித்த அன்பர் ஆச்சாரியாரின் விமர்சனம் எப்படிப்பட்டதாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அவருடைய வாயுரைக்கு, ஏற்கனவே இருந்த மதிப்பு இப்பொழுது காங்கிரசு மேலிடத்தாரிடம் கிடையாது.

காங்கிரசு கட்சியின் 'மகா சந்நிதானம்' என்று சொல்லத் தகும் நிலையில் இருந்து வருபவர் பண்டித நேரு அவர்களாவர். இந்த மதிப்பீட்டிற்கு மாற்றுக் குறைவு கிடையவே கிடையாது.

காங்கிரசின் 'மகாசந்நிதான'மான நேரு பெருமான், அந்தக் கட்சி இன்று பெற்றுள்ள நிலை குறித்து அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறார். கடந்த மூன்று நான்கு திங்களுக்கு முன்புகூட, காங்கிரசு ஊழியர் மாநாட்டில், அக்கட்சியினர் குறித்துத் தனது கருத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

இப்பொழுதும், அப்பொருள் பற்றியே அவர் உத்திர பிரதேச காங்கிரஸ் மாநாட்டில் பேசி இருக்கிறார். அது குறித்துச் சிறிது ஆராய்வோம்.

"சமதர்மத்தைப் புகுத்துவது எனக் காங்கிரசு கட்சி முடிவு கட்டி இருக்கிறது. ஆனால், இந்தச் சொல்லின் பொருளை எத்தனை காங்கிரசு கட்சியினர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் ?"

இப்படி, குறிப்பிட்ட ஒரு பொருள் குறித்து விளக்கமாகத் தெரிந்துகொள்ளாத நிலையிலேயே, காங்கிரசு கட்சியில் இருப்பவர்கள், அப்பொருள் பற்றி முடிவு கட்டி விடுகிறார்கள் எனக் குறிப்பிடுவதின் மூலம், காங்கிரசு கட்சியிலுள்ளவர்களின் அறிவு நிலையையும், காங்கிரசு கட்சியின் செயல்முறைகளையும் தெளிவுபடுத்தி இருக்கிறார் பண்டிதர் நேரு அவர்கள்.

தனது கட்சியில் இருப்பவர்களில் பெரும்பான்மையினர் புரிந்துகொண்டில்லாத ஒரு விஷயத்தை முடிவு கட்டுவதுடன், அம்முடிவை செயலாற்றவும் காங்கிரசு கட்சி முன்வருகிறது என்றால், அக்கட்சியின் அடிப்படைக் கண்ணோட்டம் அல்லது மனப்போக்கு குறித்து எவருக்கும் ஐயம் ஏற்படுவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். அதுமட்டுமின்றி, காங்கிரசு கட்சியில் இருந்துவரும் பெரும்பான்மையினர் தெரிந்தில்லாத ஒரு விஷயத்தை, அவர்கள் பெயரால் முடிவு கட்டுவது எவர் என்ற வினா கிளம்புவதும் எவருக்கும் இயல்பேயாகும்.

காங்கிரசுகட்சி முடிவு கட்டியுள்ளசமதர்மம் குறித்து பண்டிதர் கூற்றுப்படி, அக்கட்சியிலேயே இருந்துவரும் பல்லோர் தெரிந்துகொள்ளாது இருப்பதுகூட மிகுதியான வியப்பைத் தரக்கூடியதன்று. சாதாரண உறுப்பினர்களுக்கும் காங்கிரசு மேற்கொள்ளும் முடிவுகளுக்கும் தொடர்பில்லாமல் இருப்பதுகூட குறைபாடு உடையதானாலும், அது, அவ்வளவாக மதிப்பிடக்கூடியதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், சமதர்மப் பொருள் தெரியாதவர்கள் எனச் சாதாரண காங்கிரசு கட்சி உறுப்பினர்களை நேரு பண்டிதர் குறிப்பிடவில்லை. இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் காங்கிரசுக் கட்சியைச் சரிந்துவிடாமல் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கும் அக்கட்சித் தூண்கள் என்பவர்களைக் குறித்தே, மேற்கண்ட வகையில் மதிப்பிட்டுப் பேசி இருக்கிறார்.

அதாவது, 'சமதர்மத்தின் குறிப்பொருள் முழுதும் உணரப்படுமானால், அபேட்சகர்களைப் பொறுக்குவதில் கட்சியில் உள்ள முற்போக்குக் கருத்தினர் ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேர்தல் அதிகாரிகள் சலுகை கிடைப்பதும் சாத்தியமாகக்கூடும்' எனப் பண்டிதர் குறிப்பிடுவதின் மூலம், அபேட்சகர்களை சிபாரிசு செய்யும் நிலையில் உள்ளவர்களுக்கும், தலைவர்கள் என அழைக்கப்பட்டு வரும் தேர்தல் அதிகாரிகளுக்கும், காங்கிரசு கட்சியின் முடிவான சமதர்மக் கோட்பாட்டின் உள்ளடக்கம் தெரியாது என காங்கிரசு கட்சியின் 'மகா சந்நிதானம்' குற்றப்பத்திரிகை வாசித்திருக்கிறார்.

பொதுவாகக் காங்கிரசு கட்சியின் மேலிடத்தையும், குறிப்பாக 'மகா சந்நிதான'த்தையும் நம்பி அரசியலில் ஈடுபட்டு பதவி மோகம் கொண்டலைந்து கிடக்கும் காங்கிரசு தலைவர்களுக்கே, காங்கிரசு கட்சியின் முடிவான 'சமதர்மம்' புரியாது என்பது, பண்டித நேருவின் உள்ளக்கிடக்கையாக இருக்கிறது. நெருங்கி இருப்பவர்களின் பொருளறிவே இத்தகு கேலிக்குரியதாக இருக்குமானால், அக்கட்சியின் புற வட்டத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற சாதாரண உறுப்பினர்களின் விஷயஞானம் குறித்துப் பேசுவதற்கே நியாயம் இல்லை.

காங்கிரசு கட்சி எடுக்கும் முடிவுகள் அனைத்தும், காங்கிரசு கட்சியில் உள்ள தலைவர்கள் எனச் சொல்லப்பட்டு வருபவர்களால் புரிந்துக்கொள்ளப்படாமலே எடுக்கப்படும் முடிவுகளாகும் என்ற உண்மை, பண்டித நேருவின் வாயுரை மூலம் விளக்கமாகிறது. அத்துடன், தனி மனிதரான நேரு பண்டிதரின் முடிவுகள்தான் காங்கிரசு கட்சியின் முடிவுகளாக நிறைவேறுகின்றன என்ற உண்மையும் அம்பலமாகிறது.

தனி ஒரு நபரின் விருப்பு வெறுப்புக்கேற்ப செயல்படும் பயிற்சி பெற்றுள்ள குட்டித் தலைவர்கள் எனச் சொல்லப்படும் இரண்டாந்தர மூன்றாந்தர நபர்களைக் கொண்ட காங்கிரசு கட்சியை, மக்களாட்சி முறைப்படி இயங்கிவரும் கட்சி என ஏற்படிக் கொள்ள முடியும்? அக்கட்சியில் இருப்பவர்களால் சனநாயகம் பாதுகாக்கப்படும் என்றுதான் எப்படி நம்புவது சாத்தியமாகும்?

இவ்வாறு எதேச்சாதிகாரப் போக்கில் நடப்பதையே ஒரு சிறந்த அரசியல் நடைமுறையாகக்கொண்டு செயல்பட்டு வரும் காங்கிரசு கட்சியில் உள்ள சிலரைக்கொண்டுதான், மாற்றுக் கட்சி ஒன்றை உருவாக்கி மக்களாட்சியைப் பாதுகாத்து வளர்க்கப்போகிறாராம் அன்பர் ஆச்சாரியார். காங்கிரசு கட்சியினர் குறித்து, அதன் 'மகா சந்நிதானம்' கூறி இருக்கும் விமர்சனத்தைக் கண்டபிறகாவது, அக்கட்சியிலுள்ள சிலரை வெளியேற்றிவந்து, மக்களாட்சியை வளர்க்க மாற்றுக் கட்சி அமைப்பது என்ற தனது கருத்தை, அன்பர் ஆச்சாரியார் மாற்றிக்கொள்ளுவார் என நம்புகிறோம்.

55 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

இந்தியா முழுமையிலும் ஏற்படுத்தப்படுமாம்

புதுடில்லி, அக். 25—

1960-ம் 61-ம் ஆண்டிற்குள் இந்தியா முழுவதிலும்55 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக ரூ. 50 கோடி செலவு செய்யப்படும் என்று தெரிகிறது.

இதுவரையில் 34 சர்க்கரைத் தொழிற்சாலைகளுக்கு 'லைசென்சு' அளிக்கப்பட்டுள்ளதென்றும், அவைகளில், சென்னை மாநிலத்திற்கு 3 கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் ஏற்படுத்த லைசென்சு வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரியவருகிறது.

இதற்குத்தேவையான இயந்திரச் சாதனங்கள் அயல் நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுமாம்.

சென்னை மாநிலத்தில்

கால்நடைகள் எண்ணிக்கை

சென்னை மாநிலத்தில் இந்த ஆண்டில் மொத்தம் 2,55,64,416 கால்நடைகள் இருக்கின்றனவாம். 1951-ல் இருந்ததைவிட இது 7·9 சதவிகிதம் குறைவு. புயலினால் ஏற்பட்ட சேதமே இந்தக் குறைவுக்குக் காரணமாம்.

கோழி, வாத்து முதலியவை 1,24,09,004 இருப்பதாகத் தெரிகிறது.

பெண் ஊழியர்களுக்கு அரசாங்க உத்தரவு

பெங்களூர், அக். 30—

அரசாங்கத்தின் முன் அனுமதியில்லாமல், திருமணமான ஒருவரை—அவரது முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே, எந்த அரசாங்கப் பெண் ஊழியரும் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என மைசூர் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதற்காக அரசாங்க ஊழியர்களின் விதிமுறையும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தலில்!

700 இடங்களில் இந்துமகா சபை போட்டியிடுமாம்

பூனா, அக். 29—

அகில இந்திய இந்து மகாசபை, மாநில சட்டசபைகளுக்கு 700 இடங்களிலும், பாராளுமன்றத்திற்கு 70 இடங்களிலும் பொதுத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருப்பதாக, சபையின் பொதுச்செயலாளர் தேஷ்பாண்டே அறிவித்துள்ளார்.

மகாராஷ்டிரம், பஞ்சாப், குசராத் ஆகிய பகுதிகளில் மகாசபை —சம்யுக்த மகாராஷ்டிர சமிதி, மகாபஞ்சாப் சமிதி, மகாகுசராத் சமிதி ஆகிய கட்சிகளுடன் கூட்டாகப் போட்டியிடுமாம்.

துணிவும் - தயக்கமும்!

ஐதராபாத், அக். 29—

"காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து பொதுத் தேர்தலில் கூட்டாகப் பண்டித நேருவுக்கு எதிராக ஒரு அபேட்சகரை நிறுத்த வேண்டும்" என்று இந்து மகாசபை செயலாளர் தேஷ்பாண்டே யோசனை ஒன்று கூறியுள்ளார்.

அதே நேரத்தில் அவர், 'எல்லாக் கட்சிகளும் ஒன்று கூடினாலுங்கூட பண்டித நேருவைத் தோற்கடிப்பது சுலபமான காரியமல்ல,' என்றும் மறைமுகமாக நேருவுக்கு ஆதரவு காட்டிப் பேசியுள்ளார்!

மகளிரே அங்கம் வகிக்கும் கிராமப் பஞ்சாயத்து

சில திங்களில் அரிய சாதனை

நெல்லூர், அக். 27—

நெல்லூர் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு என்ற கிராமப் பஞ்சாயத்து சபையிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் பெண்களேயாவர்; இந்தச் சபை அவர்களின் ஆதிக்கத்தின்கீழ் வந்து சில திங்கள்களே ஆகின்றன.

கிராம மக்கள், மின்சார எஞ்சினியர்கள் அடங்கிய அவையில், சபை தலைவி விமலாதேவி; மின்சார சக்தியை ஆரம்பித்து வைத்தார்.

இனி வெவ்வேறு கிராமத்தில் மின்சார விளக்குகள் மக்களுக்கு ஒளிதரும்.

மரச் சாமான் உற்பத்தி பயிற்சி நிலையம்

மதுரையில் ஏற்படுத்துவதற்கு டில்லி அனுமதித்துவிட்டது

சென்னை, அக் 30—

வீடுகளுக்கு வேண்டிய மரச் சாமான்களின் அலங்காரப் பகுதிகள், வீட்டுக் கதவுகள், கார்-இரயில் பெட்டிக் கதவுகள் ஆகியவை உற்பத்தி செய்வதில் பயிற்சியளிக்கும் நிலையம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்துவதற்கு டில்லி ஆட்சியினர் அனுமதித்துள்ளனராம்.

இங்கு ஆண்டுதோறும் 20 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்; அவர்களுக்கு மாதம் ரூ 30 உதவிச் சம்பளம் அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசாங்கம் மானியமாக ரூ 40,250-ம், கடனாக ரூ. 12,000-மும் தர முன்வந்துள்ளது.

நெசவுத் தொழிலாளருக்கு கூலி உயர்வு கிடைக்கும்

குடந்தை, அக் 28—

கடந்த 21-ந் தேதி முதல் கூலி உயர்வு கோரி தஞ்சை மாவட்டத்திலுள்ள 15,000 நெசவுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர்.

இந்தத் தகராறில் உற்பத்தியாளருக்கும்—தொழிலாளருக்கும் சமரசம் ஏற்பட்டுள்ளது; அதின்படியாகக் கூலி உயர்வு தருவதற்கு உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டனர்.

28—10—56 முதல் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். ஊரில் பிறப்பிக்கப்பட்டிருந்த 144 தடை உத்தரவும் வாபஸ்பெறப்பட்டது.

'முதல்தர நாடாக சீனா விளங்கும்'

மக்களின் நல்வாழ்வில் அரசாங்கத்தின் அக்கரை

அனந்தசயனம் தரும் தகவல்

"சீனா துரிதமாக முன்னேறி வருகிறது. ஆண்களும் பெண்களும் இடைவிடாது உழைக்கின்றனர். தங்களுடைய நாடு எல்லாத் துறையிலும் முன்னேறவேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடையே மேலோங்கி நிற்கிறது.

"அங்கு சூதாட்ட விடுதிகள் இல்லை; குதிரைப் பந்தயங்கள் இல்லை; விலைமாதர் விடுதிகள் இல்லை; பிச்சைகாரர்கள் இல்லை; இலஞ்சம் ஒழிந்துவிட்டது; வழக்குகள் மிகக் குறைவு.

"மக்கள் சுறுசுறுப்பாக உழைக்கின்றனர்; அரசாங்கத்திடம் அதிக விசுவாசம் கொண்டுள்ளனர்.

"கல்லூரிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கின்றனர்; பெண்களைப் பார்த்து மாணவர்கள் கலாட்டா செய்வதில்லை

"மருத்துவ வசதி இலவசமாக அளிக்கப்படுகிறது.

"எல்லாக் கார்களும் அரசாங்கத்துக்குச் சொந்தம்.

"அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மலிவாகக் கிடைக்கின்றன.

"வேலை நிறுத்தம், கதவடைப்பு அங்கு இல்லை; தொழில்கள் எல்லாம் தேசியமயமாக இருக்கின்றன; வேலையில்லாத் திண்டாட்டமும் கிடையாது

"அங்கு வருமான வரி, மரண வரி எதுவும் இல்லை; சீக்கிரத்திலேயே சீனா உலகத்தின் முதல் தர நாடாக விளங்கும்."

இந்த கருத்தை, சுமார் ஒரு மாத காலம் சீனா நாட்டைச் சுற்றிப் பார்த்துவந்த இந்திய பார்லிமெண்டரி தூதுகோஷ்டியின் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் வெளியிட்டுள்ளார்.

இன்றைய நிலை பற்றி அவருக்குக் கவலையில்லை?

ஜான்பூர், அக். 28—

"ரஷ்யாவில் இன்று சுபீட்சம் நிலவுவது உண்மையே; ஆனால், அவர்கள் அந்த நிலைக்கு வர 40-ஆண்டுகள் பாடுபட நேரிட்டது," என்று, பண்டித நேரு கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"எதிர்காலத்தில் இந்தியா சோஷலிச நாடாக விளங்கப் போகிறது; எவ்விதப் பொருளாதார வேற்றுமையும் இருக்காது; சமூகத்திலுள்ள குறைகள் அனைத்தும் ஒழிக்கப்படும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

120 மைல் நீளமுள்ள எண்ணெய்க் குழாய்?

தபீக் துறைமுகத்திலிருந்து ஸையீத் துறைமுகம் வரை—சூயஸ் கால்வாயைச் சேர்ந்தாற்போல் 120 மைல் நீளமுள்ள எண்ணெய்க் குழாய் அமைப்பதுபற்றி எகிப்து அரசாங்கம் யோசித்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது. நாள்தோறும் 1,50,000 டன் எண்ணெய் அனுப்பக்கூடியதாக அது இருக்குமாம்!

இந்தக் குழாய்கள் அமைக்கப்பட்டு விட்டால், எண்ணெய்க் கப்பல்கள் கட்டவேண்டிய அவசியமிருக்காதென்றும், எண்ணெய்க் கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாகச் செல்வது அவசியமில்லாமல் போகக்கூடும் என்றும் நம்பப்படுகிறது.

சென்னைக்கு இல்லை!

புதுடில்லி, அக். 27—

மத்திய அரசாங்கம் சிறு தொழில் வளர்ச்சிக்காக ரூ. 70,00,000 கடனாக அளித்துள்ளது; இந்தத் தொகையில் உத்திரப் பிரதேசத்திற்கு ரூ. 40 இலட்சம்; பஞ்சாப் மாநிலத்திற்கு ரூ. 20 இலட்சம்; டில்லிக்கு ரூ. 10 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

தாயக விடுதலைக்கு விரோதிகள் நம்மைக் கேலி பேசும் விசித்திரம்

‘சர்க்கார் செய்யாத நன்மைகளை மக்களுக்கு கழகம் செய்திருக்கிறது’

சென்னை - சிந்தாதிரிப்பேட்டையில் என். வி. நடராசன் முழக்கம்

“நம் தாயகத்தின் விடுதலைக்கு எதிரிகளாகவும் மக்களிடம் அளித்த உறுதிக்கு மாருகவும் நடந்து வருபவர்கள்—இப்போது மந்திரிகளாகியுள்ளவர்கள்—திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடுவதைப்பற்றி ஏதேதோ பேசுகிறார்கள்! நமது கழகத்தின் மீது இவர்கள் என்ன குறைபாட்டைக் கூற முடியும்? நாம் மக்களுக்கு என்ன குறைகளைச் செய்திருக்கிறோம்? இன்னும் சொல்லப்போனால், இந்தச் சர்க்காரால் மக்களுக்குச் செய்ய முடியாத நன்மைகளையெல்லாம்கூட நமது கழகம் செய்திருக்கிறது.

“நெசவாளர்களுக்கு அவர்கள் வாழ்வில் புத்துயிரளித்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான். தொழிலாளர்கள்—நடுத்தர மக்கள் ஆகியோரது பிரச்சினைகளில் எல்லாம் தலையிட்டு, அவர்கள் வாழ்க்கை வசதிகளைத் தேடித்தர தி. மு. கழகம் தான் தீவிர எண்ணம் கொண்டு செயலாற்றி வருகிறது”

இவ்வாறு, 28—10—56-ல், சென்னை—சிந்தாதிரிப்பேட்டையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் துணைப்பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் சொன்னார்:—

“திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டின் விடுதலைக்கான வகையில் செய்துள்ள மகத்தான சாதனைகளையெல்லாம் நமது வருங்காலச் சந்ததியினர் கண்டு பூரிப்படையத்தான் செய்வர்.

“நமது கழகம் துவங்கிய ஓராண்டிற்குள்ளாகவே, குன்றத்தூரில் பேச்சுரிமைக்காகப் போராட்டம் நடத்தினோம்; அப்போராட்டம் சாமானியமானதல்ல; 7, 8 பேர் துப்பாக்கியால் தாக்கப்பட்டனர்; ஆயிரக்கணக்கில் தோழர்கள் தடியடிபட்டனர்; பலர் அவயவங்கள் சிதைவுபட்டன.

‘பேச்சுரிமைக்குப் போரிட்டோம்; துப்பாக்கிகளைச் சந்தித்தோம்’

“குன்றத்தூரில் துவங்கப்பட்ட அந்தக் கொடுமை—சர்க்காரின் அடக்குமுறை வெறியாட்டம்—இவ்வாண்டு பிப்ரவரிவரைகூட ஓயவில்லை. சர்க்காரின் அடக்குமுறைக் கொடுமை நாரணமங்கலத்திலும், பிறகு தென் தாமரைக்குளத்திலுமாக நடைபெற்றுத் தலைவிரிகோலமாய் நாட்டைச் சுற்றிவந்தது. சென்ற பிப்ரவரி 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தாலில் தம்மம்பட்டி, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் நமது தோழர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்வரை ஓயவில்லை. இன்னும் அந்த அடக்குமுறைக்கு ஆளான நமது தோழர்களில் ஒருவர் மருத்துவமனையில் இருக்கிறார்!

“நாம் இவ்விதம் பல தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறோம். வசதிக் குறைவுகள் நமக்கு ஏராளம்; இவற்றிடையே நம்மைச் சார்ந்தவர்களே நம்மை இழித்தும் பழித்தும் பேசி வருகின்றனர். இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிப் பாதையை நோக்கி வீரநடை போட்டுச் செல்கிறது.

“இந்த நாடு நமதாகவேண்டும்; நாம் யாருக்கும் அடிமைப்பட்டவர்களல்ல—என்ற உயரிய கொள்கைகளுக்காக நாம் செய்த மகத்தான பணி, இன்று, மக்களை விழிப்படையச் செய்திருக்கிறது; அரசியலில் புதியதோர் கட்டம் ஆரம்பமாகியிருக்கிறது.

“தென்னகத்தில் ஜனநாயகப் பண்புடன் இயங்கிவரும் ஒரு எதிர்க்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்வேன். வடநாட்டிலெல்லாம், காந்தியாரைக் கொன்ற எதிர்க் கட்சிகளையும், லியாகத் அலிகானைக் கொன்ற எதிர்க் கட்சிகளையும்தான் நாம் காணமுடியும். இங்கேயோ, நாம் சர்க்காரின் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கிறோம் என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம், சர்க்கார்மீது கடுஞ்சொல் வீசி அவர்களைத் தாக்கினதில்லை—அவர்களுக்கு இன்னல்கள் விளைவித்ததில்லை.

“நாம், நம்மீது ஏவப்பட்ட கொடுமைகளையெல்லாம் தாங்கிக்கொண்டோம். உடையார்பாளையத்திலே வேலாயுதம்—நெல்லிக்குப்பத்திலே மஜீது—சென்னையிலே பாண்டியன்—இப்படி நமது கொள்கைக்காகப் போராடின தோழர்களெல்லாம் கொல்லப்பட்டனர்; என்றாலும், கழகம் வளர்ந்துகொண்டே இருக்கிறது.

“சென்ற 1949-ல், திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டபோது, இன்று தேர்தலில் ஈடுபடுவோம் என்று நம்மில் யாரும் நினைத்ததே இல்லை. முதல் முதலில், ‘இவர்கள் எத்தனை நாளைக்குத்தான் ஒன்றுபட்டு இருப்பார்கள்?’ என்று ஆருடம் பார்த்தனர் சிலர். ஆனால் இப்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தை அசைக்கக்கூடிய சக்தி இன்று எவருக்கும் இல்லை என்ற நிலையை நாம் காண்கிறோம்.

“கழகத்தை ஒழித்துக் கட்டுவேன்—என்று கங்கணம் கட்டினார் ஆச்சாரியார்; இன்று, எங்கோ ஒரு மூலையில் பதுங்கிக் கிடக்கிறார். குண்டர்களை வைத்துக்கொண்டு நமக்கு எதிராக எதிர்ப்பு மாநாடுகளை நடத்திக் கர்ஜனை செய்தார் காமராசர்; இன்று, அவர் நம்மைப் பார்த்துத் திகைக்கும் அளவிற்கு நாம் வளர்ந்திருக்கிறோம். 150 பேர் போட்டியிட்டு, 100 பேர் வெற்றி பெற்று எங்கே அவர்கள் மந்திரி சபை அமைத்துவிடுகிறார்களோ என்று அவர்கள் அஞ்சுகிறார்களாம்! நம் கூட்டங்களைக் கண்டு மிரளுகிறார்களாம்!

“நமது கூட்டங்களில் பெருவாரியாக மக்கள் வந்து கூடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்த சர்க்காரிடம் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருகிறது என்பதைத்தான். அது எடுத்துக் காட்டுகிறது.

“இன்று ‘அறிவக’த்தில் நடைபெற்ற தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், யார் யாரை எங்கெங்கு நிறுத்துவது என்பதுபற்றி கழகத் தோழர்களும், பிறரும் கருத்துரைகள் வழங்கியிருக்கின்றனர். கடந்த 12 நாட்களாகத் தமிழகமெங்கும் தேர்தல் சூழ்நிலை அறியச் சென்ற ஆய்வுக் குழுவினரிடம் மக்கள் காட்டின உற்சாகத்தைப்போல், தலைநகரிலும் காட்டப்பட்ட உற்சாகம், இங்கும் நமக்கு நல்ல வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடுவதென்பது பட்டம் பதவிக்காக அல்ல!

“இந்த நாட்டிற்குத் ‘தமிழ் நாடு’ என்று பெயரிட வேண்டுமென்ற சாதாரண கோரிக்கைக்காக தியாகி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார்; இந்தக் காங்கிரசாரோ, முதலமைச்சர் காமராசரோ அவரை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

‘வெள்ளையரிடம் இருந்த மனிதப் பண்புகூட காமராசர்களிடம் இல்லையே’

“வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டபோது-6,000 மைல்களுக்கு அப்பாலிருந்து இங்கு வந்த அந்த வெள்ளை ஏகாதிபத்தியம் ஆண்டபோது, காந்தியார் உண்ணாவிரதமிருந்திருக்கிறார்—அவர் உயிர் ஊசலாடுகிறது என்றவுடன் சிறிதேனும் மனிதத் தன்மை வைத்து, அவருடன் பேசி சமரசம் கண்டனர்—அவர்களிடம் கடுகளவாவது மனிதப் பண்பு இருந்திருந்த காரணத்தால்! ஆனால், காந்தியாரின் வாரிசு எனக் கூறிக்கொள்ளும் காங்கிரசாரும் காமராசரும், சங்கரலிங்கனாரின் பிரச்சினைகளைக் கவனிக்கிறோம் என்று ஆறுதல் வார்த்தையாவது கூறியிருக்கலாமே? கூறினார்களா அப்படி! ‘காங்கிரஸ் தியாகிக்கே இந்த அநீதி இழைக்கப்பட்டிருக்கிறதே, இது நியாயமா?’ என்று நல்ல காங்கிரசாரை—தன்மானமுள்ள காங்கிரசாரைக் கேட்கிறோம்; இவ்விதக் கொடுமையைச் செய்த இந்தச் சர்க்கார் மீது நாம் பகிரங்கமாகவும் குற்றஞ்சாட்டுகிறோம்.

“இவ்வித அநீதிகளைச் செய்துவிட்டு உங்களிடம் ‘ஓட்டுக் கேட்கவும் வரப்போகிறார்களாம்! மக்கள் என்ன சொல்வார்கள்? ‘தேவிகுளம் பீர்மேட்டைப் பறிகொடுத்தாயே—எங்கள் உரிமையை வடநாட்டுக்கு அடிமைப்படுத்தினாயே—உனக்கா எங்கள் ஓட்டு?’ என்று தானே கேட்பார்கள்? மக்களைப் பார்த்து ஓட்டுப் போடக் கேட்கும் வகையில் மக்களுக்குக் காமராசர் செய்த நன்மைகள் என்ன?

“இங்கே ஒரு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தேர்தலில் நிற்கிறார் என்றால், அவர் வெற்றிபெறச் செய்ய வேண்டியது உங்கள் கடமை. ‘எங்களிடம் இராமநாதபுரம் இராசா இருக்கிறார்; இராசா சர் இருக்கிறார்; டாடா இருக்கிறார்; பிர்லா இருக்கிறார்; எங்கள் பண சக்தியைக் கொண்டு இவர்களை ஒருகை பார்த்துக்கொள்ளலாம்—என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்களாம். இதற்கெல்லாம்நீங்கள் நல்ல முறையில் பதில்தரவேண்டும்.

‘உயிருக்கு உயிரான ஓட்டுரிமையை ஒரு சில ரூபாய்க்கு விற்பதா?’

“ஓட்டுக்களையெல்லாம் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிவிடலாம் என்ற எண்ணத்தை யார் கொண்டிருந்தாலும் அந்த அகம்பாவத்தை நீங்கள் தூள்தூளாக்குங்கள்! உயிருக்குயிரான ஓட்டுரிமையை, கேவலம் சில ரூபாய் விலை கொடுத்து வாங்கிவிடலாம் என்று யார் கருதினாலும் அந்த எண்ணத்தை நீங்கள் உடைத்தெறியுங்கள்”!

“வெற்றி—தோல்வி பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை; ஆனால், ‘பண பலத்தை வைத்துக் கொண்டு எதையும் சாதித்து விடலாம்; மக்களின் சக்தியைச் சிதைவுறச் செய்யலாம்’ என்ற நப்பாசைக்காரர்களுக்குப் பொதுமக்களாகிய நீங்கள் தக்க பாடம் கற்பிக்க வேண்டும்.

“திராவிட முன்னேற்றக் கழகம் மக்களைப் பல முறை உதவி கேட்டிருக்கிறது. புயல் நிதி, மாநாட்டு நிதி, அத்தக்குடி சதி வழக்கு நிதி, கல்லக்குடி நிதி கட்டிட நிதி—என்று இப்படிப் பல முறை மக்களிடம் நிதி கேட்டிருக்கிறது, தி. மு. கழகம்; அந்த வேண்டுகோளுக்கெல்லாம் மக்கள் தந்த உதவியையும் ஒத்துழைப்பையும் பயன்படுத்தி இன்று திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தானதோர் சக்தியாகத் திகழ்கிறது.

“தி. மு. கழகம் தேர்தலில் நிற்பது, 150 ரூபாய் சம்பளம் பெறுவதற்காக அல்ல; அல்லது அமைச்சரவை அமைக்க வேண்டும் என்றகுறிக்கோளுக்காகவும் அல்ல!

“பெரியார் அவர்கள் சொல்கிறார்—நாம் ரூ. 150 சம்பளத்திற்காகத் தேர்தலில் நிற்கிறோம்—என்று! பெரியார் அவர்களுக்கு அண்ணா அவர்கள் ஏற்கனவே நினைவூட்டியிருக்கிறார் — ‘நாம் வெற்றி பெற்று ரூ. 150 சம்பளம் வாங்கினால் அதைப் பெரியார் அவர்களுக்கே வேண்டுமானாலும் அனுப்பிவிடுகிறோம்’ — என்று! இதை நான் கையாண்டிக்காகச் சொல்லவில்லை. நாங்களென்ன, சம்பாதிக்க யோக்கியதை அற்றவர்களா? நாங்கள் சம்பாதிக்க வேண்டுமென நினைத்திருந்தால் ஊரூராய் சுற்றி அலைந்து, தடியடி, தொல்லைகளுக்கெல்லாம் ஆளாக வேண்டிய அவசியமே இல்லையே! கதர் கட்டிக்கொண்டு காமராசரைச்சுற்றி வந்துவிட்டால் போதுமே! எனவே அந்த அற்ப ஆசைக்காக அல்ல, நாம் தேர்தலில் போட்டியிடுவது! அப்படியிருந்திருந்தால் நாங்கள் எப்போதோ சட்ட மன்றத்தில் மிகச் சுலபமாக இடம் பெற்றிருப்போம்!

‘தமிழ்ப் பகுதிகளைக் கோட்டைவிட்டவர்கள் விழாவில் கலந்து கொள்ளும் வேதனை’

“இந்த ஆட்சியில், நாட்டில் ஏராளமான அநீதிகள் நடக்கின்றன. வடஎல்லைத் தகராறைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக தோழர் ம. பொ. சிவஞானம் போராட்டம் நடத்தினார்—ஆனால், ‘இதோ, அதோ’ என்று காலம் கடத்தி அவரை ஏமாற்றிவிட்டார்கள். இந்த சர்க்கார் நாணயமுள்ள சர்க்காராக இருந்தால், சொன்ன சொல்லைக் காப்பாற்றியிருக்க வேண்டாமா?

“அண்மையில் நாங்களெல்லாம் செங்கோட்டைப் பகுதிக்குச் சென்றிருந்தபோது, உண்மையிலேயே அப்பகுதிகளைப் பார்த்துக் கண்ணீர் விட்டோம். அப்பகுதிகளில் எங்கு பார்த்தாலும் தேக்குமரக் காடுகள்—ஆங்காங்கே யானைக் கூட்டங்கள்—காட்டிலுள்ள மரங்களையெல்லாம் சாய்த்துக் கீழே கொண்டுவந்து அடுக்கி வைக்கும் காட்சியாயவைகளைக் கண்டோம். அப்பகுதிகளெல்லாம் மிகவளமான பகுதிகள். அந்தப் பகுதிகளையெல்லாம் மாநிலப் புனரமைப்புக் குழுவினர்கூட நம் மாநிலத்திற்குத் தந்து சிபாரிசு செய்தனர்; ஆனால், மந்த புத்தியுள்ள இந்தக் காமராசர் சர்க்கார், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைப் பறிகொடுத்தது மட்டுமின்றி, மாநிலப் புனரமைப்புக் குழு கொடுத்த செங்கோட்டைத் தாலுகாவில் முக்கியப் பகுதியைகோட்டைவிட்டுஇருக்கிறது. அந்தசெங்கோட்டை நாளையத் தினம் கேரளத்துடன் சேரப்போகிறது. இந்த இலட்சணத்தில், தமிழ் நாட்டுடன் சேரும் திரு-தமிழகப் பகுதிகளில் நவம்பர் 1-ந் தேதி நடைபெறும் விழாவில் கலந்துகொள்ள நாகர்கோவில் போகிறாராம், காமராசர்!

“நம்முடைய நாட்டுப் பொருள்களையெல்லாம் ஏராளமான அளவில் கொள்ளை போகச் செய்கிறது, இந்த சர்க்கார்! இங்கு விற்பனை வரி விதிக்கப்படுகிறது—வாங்குவோருக்கும் வேதனை — விற்பவர்களுக்கும் தொல்லையாக இருக்கிறது!

“அந்த விற்பனை வரி மூலம் கிடைக்கும் ரூ. 21 கோடிக்குப் பதிலாக மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைக்கும் மிகப் பெரிய வரிகளை இங்கேயே—அதாவது நம் சர்க்காருக்குச் சேரும் வழிவகை செய்தால் என்ன என்றுதான் நாம் சர்க்காரைப் பார்த்துக் கேட்கிறோம். புகையிலை வரி, தீப்பெட்டி வரி, கலால் வரி, மீன் வரி இப்படிப் பல வகைப்பட்ட வரிகளையும் விதித்து, அந்தத் தொகையையெல்லாம் ஏன் வடநாட்டுச் சர்க்காருக்கு அனுப்பி வைக்க வேண்டும்? என்றுதான் நாம் கேட்கிறோம்.

“எனவே, ஒவ்வொரு பிரச்சினையிலும் டில்லி ஏகாதிபத்தியத்திற்குக் குனிந்து கொடுத்துக்கொண்டு, நம் தாயகத்தை அடிமைப்படுத்தி வரும் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு அடுத்துவரும் பொதுத் தேர்தலில் தக்க பாடம் கற்பிக்க வேண்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நிற்பவர்கள் வெற்றி பெற ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.”

பொதுத் தேர்தல்—தேதி நிர்ணயம்

தேர்தல் அதிகாரி அறிவிப்பு

புதுடில்லி, அக். 28—

பொதுத் தேர்தலுக்கான தேதியை நிர்ணயிக்குமாறு மாநில அரசாங்கங்களைக் கேட்டுள்ளதாகவும், அதற்குப் பின்னர் முக்கிய அரசியல் கட்சிகளைக் கலந்தாலோசிக்கப் போவதாகவும் மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் அதிகாரி சுகுமார் சென் அறிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தி தர மறுப்பதற்குக் காரணம்?

புதிய மாநில அமைப்பில் திரு-கொச்சியில் உள்ள ஐந்து தாலுகாக்கள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்படுவதை திரு-கொ. இராசப் பிரமுகர் விரும்பவில்லை என்றும், அதனால் அவர் நவம்பர் முதல் தேதியன்று வாழ்த்துச் செய்தி தர மறுப்பதாகவும், விரோத மனப்பான்மை வளராமல் இருக்கவே அவர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தவில்லை என்றும் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் மூலம் செய்தி கிடைத்துள்ளதாம்.

1953 அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மாதாகள் சேமிப்பு இயக்கத்தின்கீழ் 1956 ஆகஸ்ட் 10-ந்தேதிவரை மொத்தம் ரூ 4,27,08,000 வசூலாகியுள்ளது.

'ஹங்கேரியில் கூட்டு சர்க்கார் அமையும்'

'ஒரு கட்சி சர்வாதிகாரம் ஒழியும்; சுதந்திரத் தேர்தல் நடத்தப்படும்'

பிரதமர் நாகி வானொலி அறிவிப்பு

ஹங்கேரியில் ஒரு கட்சி ஆட்சியை ஒழித்து ஒரு கூட்டுச் சர்க்கார் அமைக்கப்படும் என்று பிரதமர் இம்ரிநாகி புதாபெஸ்டு வானொலி மூலம் குறிப்பிட்டிருக்கிறாராம்.

கம்யூனிஸ்டுகள் ஹங்கேரியில் பதவிக்கு வந்தது எப்படி?

யுத்த பிற்காலத்தில் ஹங்கேரி குடியரசில் சிறு நிலச்சுவான்தார் கட்சியினர் ஆட்சி செலுத்திவந்தனர்.

1947-ம் ஆண்டு மே திங்களில், இராணுவத்தினருடன் கூட்டுச் சதி செய்து, கம்யூனிஸ்டுகள், நிலவிக்கொண்டிருந்த ஆட்சியை பலாத்காரமாகக் கவிழ்த்துப் பதவியைக் கைபபற்றினர் என்பது வரலாறு.

நாகி பேசிக்கொண்டிருக்கும் போது, ஒலிபரப்புக் கருவியருகே வந்து, கம்யூனிஸ்டுகள் பதவிக்கு வருமுன் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் ஜோல்டன் டில்தி என்பார், "ஹங்கேரியில், 'சுதந்திரமான தேர்தல்கள்' நடத்தப்படும்" என்று அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

"புதிய கூட்டு சர்க்காரில் எல்லா சனநாயகக் கட்சிகளும் இடம் பெறும்' என்றும் பிரதமர் நாகி வானொலி மூலம் அறிவித்திருக்கிறார். மேலும் அவர், உடனடியாக ரஷ்யத் துருப்புகள் ஹங்கேரி மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்று கூறியிருக்கிறார் எனவும் தெரியவருகிறது.

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

உதவிக்குச் செல்லும் என்று 'வெள்ளை மாளிகை' அறிக்கை ஒன்று தகவலளித்திருக்கிறது.

அவசர ஆலோசனை

இந்த நிலை குறித்து, எகிப்தியத் தலைவர் நாசர் தம் சகாக்களுடனும், அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் தனது சகாக்களுடனும், மற்றும் பிரிட்டன், பிரான்சுடனும் விவாதிப்பர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★★★★★★★-★★★★★★★★★-★★

அறிவிப்பு

"அண்ணா அவர்கள் தெற்கு மாவட்டங்களில் நவம்பர் இரண்டாவது வாரத்தில் தொடர்ந்து சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை மேற்கொள்ள வேண்டி நேரிட்டுள்ளதால், 11-11-56 ஞாயியன்று நண்பர்கள் கழகச் சார்பில் நடைபெற இருந்த சிறப்புக்கூட்டம் மாற்றி வைக்கப்பட்டு, 18-11-56 ஞாயிறன்று காலை 9 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறயிருக்கிறது"

என்று நண்பர்கள் கழகச் செயலாளர் அறிவிக்கிறார்.

★★★★★★★-★★★★-★★★★★★★

ARUNA

உலகப் போர் மூளும் அபாயம்!

இஸ்ரேல் தாக்குதலுக்கு எகிப்தின் பதிலடி

பல நாட்டுத் தலைவர்களும் அவசர ஆலோசனைகளில் ஈடுபடுகின்றனர்

எகிப்திய எல்லைக்குள் புகுந்து தாக்குதலைத் துவக்கிய இஸ்ரேல் இராணுவம், சூயஸ் கால்வாய்க்கு வெகு அருகாமையில்—13½ மைல் தொலைவரை முன்னேறியது என்றாலும், எகிப்திய இராணுவம், இஸ்ரேலின் தாக்குதலுக்குத் தகுந்த பதிலடி கொடுத்திருக்கிறது என்று செய்திகள் கூறுகின்றன.

எகிப்திய இராணுவம், சினாய் பாலைவனத்தில், இஸ்ரேல் இராணுவத்தைச் சந்தித்து எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டது என்றும், பாலைவனப் பிரதேசத்தில் இஸ்ரேல் இராணுவ முகாம்களை முறியடித்தனர் என்றும், இஸ்ரேலியர் வெகுண்ட நிலையில், 'தப்பித்தோம், பிழைத்தோம்,' என ஓடிவிட்டனர் என்றும், பலத்த சேதங்கள் அவர்களுக்கு ஏற்பட்டது என்றும் எகிப்திய செய்திகள் கூறுகின்றன.

சினாய் பாலைவனத்தில், குசெய்மா பகுதியை இஸ்ரேல் இராணுவம் பிடித்துவிட்டதாக டெல் அவிவிலிருந்து வந்த செய்தி ஒன்று வேறுவகையான தகவல் தருகிறது.

எகிப்து தனது விமானப்படையையும் எதிர்த் தாக்குதலுக்காக அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐ. நா.-வில் புகார்

அமெரிக்காவின் கோரிக்கைக்கு இணங்க, இஸ்ரேல் — எகிப்திய போர் நிலை குறித்து, விவாதிக்க ஐ. நா. சபையின் பாதுகாப்புச் சபை கூடியிருக்கிறது.

அமெரிக்கா, மத்தியக் கிழக்கில் ஆக்கிரமிப்புக்கு ஆளாகும் நாட்டின்

(1-ம் கலம் பார்க்க)

இராமச்சந்திரபுரம்--பெங்களூர் தி. மு. கழக ஆண்டு விழா

1-11-56 மாலை 5-மணிக்கு, லேபர் காலனி—காந்தி வித்தியா சாலைக்கு அருகிலுள்ள பிரம்மபுரம் திடலில், திரு மு. அண்ணியப்பன் தலைமையில், மேற்படி விழா நடைபெறும்; தோழர்கள் பி. இராமசாமி, பி. கோ. கோபால், செ. விழியன், மா. மன்னர், வே. இளஞ்சேரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கழனிவாசல்:
பள்ளிக்கூடம் அருகில்
2—11—56 மாலை 5½ மணிக்கு
தலைவர்: இரா. கார்த்திகேயன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
என். எஸ். இளங்கோ
கே. அடைக்கலம்
கே. எஸ். எம். கலாநேசன்
பி. வடிவேலு

★

அய்யம்பாளையம்:
மாகாளியம்மன் மைதானம்
2—11—56 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ப. கிட்டப்பன்
பேசுவோர்:
சிற்றுளி-சுப்பிரமணியம்
எஸ். நெடுமாறன்
எஸ்.எஸ். எம். சுப்பிரமணியம்

நாகர்கோவிலுக்கு

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

வருகை

★

திரு-தமிழக இணைப்பு நாள் விழா

திரு-தமிழக இணைப்பு நாள் விழா, நவம்பர் 2-ம் நாளன்று நாகர் கோவிலில் நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பாக சிறப்புற கொண்டாடப் படவிருக்கிறது.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நவம்பர் 2-ம் நாள் நண்பகல் 2-30 மணியளவில் நாகர் கோயில்வந்து சேருவார். அன்னாருக்கு ஆரல்வாய் மொழியிலிருந்து நாகர்கோவில் வரை வழி நெடுக வரவேற்பு அளிக்கப்படும்.

மாலை 5 மணியளவில் கோட்டாறு தி. மு. கழகத்திலிருந்து பொதுச்செயலாளர் அவர்கள், வடசேரி வஞ்சியாதித்தன் புதுத் தெரு மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

மாலை 7-மணியளவில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திரு-தமிழக இணைப்பு குறித்துப்பேசுவார். ஊரெங்கும் கழகத் தோழர்கள், கழகக் கொடியேற்றி, விழாவினைச் சிறப்பிப்பர்.

ஈ. ஆர். கிருஷ்ணன் நிகழ்ச்சிகள்

நவ. 1: இராசிபுரம்
3: தாரமங்கலம்
4: சேலம்
5: எடையாச்சியூர்

'தினத் தந்தி'யின் வழக்கமான விஷமத்தனம்

உண்மையை மறைத்து மாசு கற்பிக்க முயற்சி

கழக வளர்ச்சி கண்டு பொருமை

உண்மையை மறைத்து, கழகத்தின்மீது மாசு கற்பிக்கும் போக்கிலேயே செய்திகளைத் திரித்தும், இருட்டடிப்புச் செய்தும் வெளியிட்டு வருவதை, 'தினத் தந்தி' தனது வழக்கமான விஷமப் பிரச்சாரமாகக் கொண்டிருக்கிறது.

"காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்; பொதுத் தேர்தலின்போது தி. மு. கழகத்திற்கே வாக்களியுங்கள்; ஆனால், காங்கிரசுக்குத் தான் வாக்களிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் காரணமாக எவரேனும் கருதினால் அவர்கள், காங்கிரசில், நாட்டையும் மொழியையும் மறந்து, நாட்டுமக்களின் நலன்கள் பேணாது பதவியில் அமர்ந்திருப்பதையே முக்கியமாகக் கருதும், மக்களை ஏமாற்றுகிற காமராசர் கோஷ்டியினருக்கு வாக்களிக்காதீர்; வேண்டுமானால், ஆச்சாரியார் கோஷ்டியினருக்கு வாக்களியுங்கள்" என்று தோழர் கா. அப்பாதுரையார் அவர்கள், கடந்த 20-10-56 அன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில் பேசியதற்கு, தகுந்த வகையில் கருத்து விளக்கம் அளித்து, 'அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஆனால் 'தினத் தந்தி' பத்திரிகையோ, தனது வழக்கமான விஷமத்தனத்தால், தோழர் அப்பாதுரையார், 'இராஜாஜி கோஷ்டிக்கு ஓட்டு போடுங்கள்' என்று அண்ணா முன்னிலையில் கூறியதாக மட்டும் செய்தி வெளியிட்டு, அண்ணா அவர்கள் தந்த கருத்து விளக்கத்தை இருட்டடிப்புச் செய்துவிட்டிருக்கிறது.

இந்த விஷமத்தனம் போதாது என்று, 'அண்ணா அவர்களே ஆச்சாரியார் கோஷ்டிக்கு ஓட்டுப்போடச் சொல்லு'வதுபோல கேலிச் சித்திரம் வேறு வரைந்து, கழக வளர்ச்சியில் தனக்குள்ள பொறாமையின் அளவைக் காட்டிக்கொண்டிருப்பதுடன், கழகத்தின் மீது மாசு கற்பிக்கவும் முனைந்திருக்கிறது.

அதே கூட்டத்தில் அடுத்துப் பேசிய அண்ணா அவர்கள் அப்பாதுரையார் பேச்சுபற்றிக் குறிப்பிட்டதாவது:—

"அப்பாதுரை அவர்கள் இந்தக் காமராசர் ஆட்சி மீது அவருக்கும் மக்களுக்கும் உள்ள ஆத்திரத்தினால்தான் அப்படிக் கூறினார் என்று கருதுகிறேன். ஆனால், அவர் கூறியதை, கழகத்தில் உள்ள எவரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதவில்லை. 'காங்கிரசுக்குத்தான் வாக்களிக்கவேண்டும்' என்ற கட்டாயமுடையவர்கள், 'ஆச்சாரியார் ஆட்களுக்குத் தருவதைக் காட்டிலும் காமராசர் ஆட்களுக்குத் தருவதே மேல்' என்றே கழகத் தோழர்கள் கருதுவர் என்று நான் யூகிக்கிறேன். என்னைக் கேட்டால் நான் அப்படித்தான் கூறுவேன்.

"பொதுத் தேர்தலைப் பற்றிக் கழகத்தின் கருத்தெல்லாம், காங்கிரசுக்கு மக்கள் எவரும் ஓட்டளிக்கக்கூடாது என்பது தான்."

அண்ணா அவர்களின் இந்தத் தெளிவான கருத்து விளக்கத்தை இருட்டடிப்புச் செய்துவிட்டதோடன்றி, அண்ணா அவர்களே ஆச்சாரியார் கோஷ்டிக்கே ஓட்டளிக்கச் சொன்னார் என்று கேலிச் சித்திரம் வேறு தீட்டுவது, அதன் அநாகரீகமான—வன்மையாகக் கண்டித்த பின்னும் திருந்தாத—இழிதன்மை மிக்க—விஷமத்தனமான போக்கையே காட்டுவதாகும்.

பொதுத் தேர்தலுக்காக கழகம் மேற்கொண்டுள்ள மகத்தான முயற்சி கண்டு பொருமையும், கிலியும் கொண்டுள்ள 'தினத் தந்தி' இப்படி விஷமப் பிரச்சாரத்தில் ஈடுபடுவது வியப்படைவதற்குரியதல்ல!

சொற்பயிற்சிக் கூட்டம்

1-11-56 காலை 10-மணிக்கு, சென்னை 16-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தில், திரு எம் கே மோகன் தலைமையில் நடைபெறும்; 'வாழ்க்கை' என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்; மாணவிகள் சுபிதா, சுகுணா இயக்கப் பாடல்கள் பாடுவர்; தோழர் டி. கே சீனிவாசன் பரிசு வழங்குவார்.

'தமிழ் அரசு விழா'

1-11-56 மாலை 5 மணிக்கு, சென்னை மைலாப்பூர், ரசிக சஞ்சனி சபா மண்டபத்தில், திரு. ம. பொ. சிவஞானம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சண்முகம், கா. மு. ஷெரீப், சின்னஅண்ணாமலை, கே. விநாயகம், எஸ். கே. பாலசுப்பிரமணியம், ஜி உமாபதி, கு. சா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.